**இனிமையான குழந்தைகளே! நினைவிற்கான முயற்சியின் மூலமாகவே கர்மாதீத் நிலை அடைவீர்கள். ஆகையால் ஒருபொழுதும் தன்னை அனைத்தும் அறிந்தவர் என்று நினைக்காதீர்கள். நினைவு பலத்தின் மூலம் உள்ளுக்குள் இருக்கும் குறைகளை நீக்கிக் கொண்டே இருக்க வேண்டும்.**

கேள்வி: அனைத்து குழந்தைகளின் மனநிலையையும் உறுதியானதாக ஆக்குவதற்காக தந்தை எந்த சவால் விடுகின்றார்?

பதில்: குழந்தைகளே! உணவு சமைக்கும் பொழுது கூட முழுமையாக நினைவில் இருந்து காண்பியுங்கள். இவ்வாறு தந்தை குழந்தைகளிடத்தில் சவால் விடுகின்றார். சிவபாபாவின் நினைவில் உணவு சமைத்தால் சக்தி நிறைந்துவிடும். மனநிலை மிகவும் நல்லதாக ஆகிவிடும். ஆனால் குழந்தைகள் மறந்து விடுகின்றனர். அதற்காக ஒருவருக்கொருவர் நினைவை ஏற்படுத்தக் கூடிய முயற்சி செய்யுங்கள். இரட்டை சேவை செய்ய வேண்டும். செயல்களின் கூடவே நரனிலி ருந்து நாராயணன் ஆக்கக் கூடிய சேவை செய்யுங்கள்.

பாடல்: ஓ மனிதர்களே, பொறுமையாக இருங்கள் ........

ஓம் சாந்தி. இவ்வாறு கூறியது யார்? யாருக்காக கூறியது? தந்தை வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். பக்தி மார்க்கத்தில் இவ்வாறு பாடப்படுகின்றது. பரம்பிதா பரமாத்மா வருகின்ற பொழுது அவர் வந்து தைரியம் கொடுக்கின்றார். வேறு எந்த மனிதர்களும் தைரியத்தைக் கொடுக்க முடியாது. இப்பொழுது சுகத்திற்கான நாள் வரப்போகின்றது என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். சுகதாமத்திற்கு அழைத்துச் செல்வதற்காக தந்தை வந்திருக்கின்றார். இது துக்கதாமமாக இருக்கின்றது. இவையனைத்தும் பக்தி மார்க்கத்திற்கான பாட்டாகும். இங்கு தந்தை எதிரில் அமர்ந்திருக்கின்றார். குழந்தைகளுக்கு எதையும் கூற வேண்டிய அவசிய மில்லை. ஏனெனில் நமது சுகத்திற்கான நாட்கள் வந்து கொண்டிருக்கின்றது என்பதை குழந்தைகள் அறிந்திருக் கின்றீர்கள். நாம் சுகத்திற்கான இராஜ்யத்தை ஸ்ரீமத்தின் மூலமாக ஸ்தாபனை செய்து கொண்டிருக்கின்றோம். தெய்வீக வழிப்படி நடந்து கொண்டிருக்கின்றோம். ஒன்று தெய்வீக வழி மற்றொன்று தெய்வீகமற்ற வழியாகும். தெய்வீக வழி ஒன்று மட்டுமே, அதுவே ஸ்ரீமத் என்று கூறப்படுகின்றது. தெய்வீகமற்ற வழி என்றால் தூய்மையற்ற அசுர வழியாகும். தெய்வீக வழி என்றால் தெய்வீக தூய்மையான வழியாகும். ஸ்ரீமத் மற்றும் அசுர வழிகளைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். தூய்மையானவர்களே தெய்வீகமானவர்கள் என்று கூறப்படு கின்றனர். தூய்மையற்றவர்கள் தெய்வீக மற்றவர்கள் என்று கூறப்படுகின்றனர். இது தூய்மையற்ற உலகமாக இருக்கின்றது. எந்த ஒரு மனிதனும் தூய்மையானவர்கள் கிடையாது. தூய்மையான வழியைக் கொடுக்கக் கூடியவர் ஒரே ஒரு பதீத பாவன் தந்தையாவார். அவரையே அனைவரும் நினைவு செய்கின்றனர். சத்யுகத்தை தூய்மையான உலகம் என்றும், தூய்மை இல்லாத உலகம் கலியுகம் என்றும் கூறப்படுகின்றது. இங்கு அனைத்தும் தெய்வீகமற்றதாக இருக்கின்றது. தெய்வீகத் தந்தை ஒருவரே. தூய்மையற்ற உலகில் யாரும் தெய்வீகத் தந்தையாக கிடையாது. இங்கு சங்கமயுகம் ஆகும். இந்த யுகம்

உங்களுக்காகவே தவிர உலகத்தினருக்காக கிடையாது. சங்கமயுகம் வருவதற்கு அதிக காலம் இருக்கின்றது என்று உலகத்தினர்கள் நினைக்கின்றனர். தூய்மையற்ற கலியுகத்தை தூய்மையான சத்யுகமாக ஆக்குவதற்காக தந்தை வருகின்றார். அந்த குமார், குமாரிகளும் தூய்மையானவர்களாக இருக்கின்றனர். ஆனால் கண்டிப்பாக தூய்மை இழந்தவர்களாக ஆகியே தீர வேண்டும். விகாரத்தினால் பிறப்பு எடுக்கின்றனர். ஆகையால் தான் இந்த விகார உலகில் யாரும் தெய்வீகமானவர்களாக இருப்பது கிடையாது. தெய்வீகமானவர்கள் என்று விகாரமற்றவர்களைக் கூறப்படுகின்றது. விகாரமற்றவர்கள் விகாரமற்ற உலகில் இருப்பார்கள். அது முழுமையாக விகாரமற்ற உலகமாகும். முழுமையாக விகாரமற்ற உலகம் இருக்கும் பொழுது முழுமையாக விகாரமுள்ள உலகமும் இருக்கும். இது முழுமையான தெய்வீகமற்ற உலகமாகும். முழுமையாக தெய்வீக உலகம் என்று சத்யுகம் கூறப்படுகின்றது.

இப்பொழுது குழந்தைகளாகிய உங்களை தெய்வீக தந்தை பொறுமையானவர்களாக ஆக்கியிருக் கின்றார். தெய்வீக ஜீவாத்மா என்று கூறப்படுகின்றதே தவிர வெறும் ஆத்மாவை மட்டும் தெய்வீகம் என்று கூற முடியாது. ஆத்மாக்கள் நிராகார உலகில் இருக்கின்றன. தூய்மையான உலகில் தான் தெய்வீக மனிதர்கள் இருப்பார்கள். இது அசுத்தமான உலகமாக இருக்கின்றது. அசுத்த உலகை தூய்மையான உலகமாக ஆக்குவது - இது ஒரு நிராகார தெய்வீக தந்தையின் காரியமாகும். குழந்தை களாகிய உங்களுக்கு பொறுமை கிடைக்கின்றது - குழந்தைகளே! இப்பொழுது சத்யுகம் வந்து கொண்டிருக் கின்றது. சுகதாமம் ஸ்தாபனை செய்வதில் நேரம் தேவைப்படுகின்றது. உடனடியாக துக்கதாமம் விநாசமாகி சுகதாமம் ஸ்தாபனை ஆகிவிடாது. உங்களையும் பாருங்கள், எவ்வளவு நேரம் தேவைப்படுகின்றது! அசுத்தமான உலகமானது எவ்வளவு பெரியதாக இருக்கின்றது! நீங்களும் தகுதியுடையவர்களாக ஆகுங்களேன்! நாங்கள் சொர்க்கத்திற்குச் செல்வதற்காக முழுமையாக தகுதியுடையவர்களாக ஆகவில்லையென்று நீங்களே கூறுகின்றீர்கள். முழுமையாக தகுதியுடையவர்களாக ஆகி விட்டால் பிறகு கர்மாதீத் நிலை ஏற்பட்டு விடும். ஆனால் அதிகமானவர்களுக்கு தேகாபிமானம் உள்ள காரணத்தினால் நாம் சம்பூர்ணம் ஆகி விட்டோம் என்று கூறுகின்றனர். நமக்கு ஸ்ரீமத்திற்கான அவசியமில்லை. அதனால் நினைவும் செய்வ தில்லை. தந்தையின் நினைவின் மூலமாகவே உயர்ந்த நிலை அடைவீர்கள். நாம் நிரந்தரமாக தந்தையை நினைவு செய்கின்றோம் என்று யாரும் கூற முடியாது. நாம் நிரந்தரமாக நினைவில் இருக்கின்றோம் என்று யாரும் உள்ளுக்குள் நினைத்துக் கொள்ள வேண்டாம். நினைவில் இருந்து கொண்டே இருந்தால் வேறு என்ன வேண்டும்? முழு நாளும் யாராவது நினைவில் இருந்தால் கர்மாதீத் நிலை ஏற்பட்டு விடும். பாபாவின் நினைவில் இருப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. சுகதாமத்தின் இராஜ்ய பாக்கியத்தை அடைவதற்காக நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள். தன்னைப் பாருங்கள் - ஒருவேளை நம்மிடத்தில் அதிக விகாரம் இருந்தால், குறைகள் இருந்தால் நாம் உயர்ந்த பதவியடைய முடியாது. நிரந்தரமாக நினைவிற்கான பந்தயம் செய்ய முடியாது. நான் சம்பூரணமாக இருக்கின்றேன் என்றும், தன்னை புத்திசாலி என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். சிவாலயம், சத்யுகத்தில் தான் சம்பூர்ண நிலை ஏற்படும். முழு பாரதமும்

சிவாலயமாக ஆகிவிடும். லெட்சுமி நாராயணனின் இராஜ்யம் நடைபெறுகின்றது. கோயில்களில் இராஜ்யம் செய்வதில்லையல்லவா! சிவாலயம், சத்யுகத்தில் அனைத்து தேவி தேவதைகளும் இராஜ்யம் செய்வர், பிறகு பூஜைக்காக முக்கியமாக லெட்சுமி நாராயணனின் சித்திரத்தை உருவாக்கி அவர்களுக்கு கோயில்களையும் உருவாக்குகின்றனர். முதல் நம்பரில் வரக் கூடியவருக்கே பூஜை நடைபெறுகின்றது. இப்பொழுது அவர்களுக்கு ஜட கோயில்கள் உள்ளன. சைத்தன்ய மாக இராஜ்யம் செய்கின்ற பொழுது உலகிற்கே எஜமானர்களாக இருக்கின்றனர். பாரதத்தில் இருந்தாலும் உலகிற்கே எஜமானர்களாக இருந்தனர். வேறு எந்த இராஜ்யமும் கிடையாது. நாம் இப்பொழுது மீண்டும் நமது தெய்வீக இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கின்றோம்.

தூய்மையான உலகிற்குச் செல்வதற்காக முதலில் கண்டிப்பாக தூய்மையாக ஆக வேண்டி யிருக்கும். முயற்சி தேவைப்படுகின்றது. எதுவரைக்கும் வாழ்கின்றோமோ அதுவரைக்கும் நினைவில் இருக்க வேண்டும். மேலும் ஞான மழை என்பது பொழிந்து கொண்டே இருக்கின்றது. விதவிதமான முறையில் புரிய வைக்கப்படு கின்றது. உண்மையில் லெட்சுமி நாராயணனைத் தவிர தெய்வீகம் அதாவது தூய்மையானவர்கள் என்று யாரையும் கூற முடியாது. தந்தை சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார். இருப்பினும் நரகமாக ஆகி விடுகின்றது. நாடகம் சுகம், துக்கத்தினால் உருவாக்கப்பட்டது. சங்கராச்சாரியார் வந்து தனது தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றார். இருப்பினும் கிளைகள் பழையதாக ஆகுமல்லவா! சந்நியாசிகளுக்கு மகிமை இருக்கின்றது. இராம தீர்த்தர், விவேகானந்தர் போன்றவர்கள் புகழப்படுகின்றனர். ஏனெனில் சங்கராச்சாரியாருக்குப் பிறகு வந்தவர்கள். புதிது புதிதாக வருபவர்கள் தங்களை வெளிப்படுத்து கின்றனர். ஆனால் இதனை சிவாலயம் என்று கூறுவதில்லை. சிவனின் மூலமாக ஸ்தாபிக்கப் பட்ட சிவாலயம் ஒன்றே ஒன்று. மனிதர்கள் இந்த விசயங்களை முற்றிலும் அறிந்து கொள்ள வில்லை. இவ்வாறு வெறுமனே கேட்பதன் மூலம் புரிந்து கொள்ள முடியாது. முதலில் 7 நாட்கள் வந்து இலட்சியத்தைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டும். முதலில் 7 நாட்கள் புரிந்து கொள்ளுங்கள் என்று வேறு எந்த படிப்பிற்கும் கூறுவதில்லை. இந்த ஒரு பாடசாலையில் தான் இலட்சியம் கொடுக்கப்படுகின்றது. முதன் முதலில் தந்தையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தந்தை கூறுகின்றார் - நான் குழந்தைகளுக்கு சேவை செய்வதற்காக வந்திருக்கின்றேன். முந்தைய கல்பத்தில் இருந்தவர்களே வருவார்கள். நிச்சயபுத்தி ஏற்படாத வரைக்கும் புத்தியில் அமராது.. ஆகையால் தான் பாபா கேட்கின்றார் - எந்த அளவிற்கு நம்பிக்கையுடையவர்களாக ஆகியிருக் கின்றீர்கள்? இது பொதுவான சத்சங்கம் கிடையாது. இந்த மகாத்மா கீதையை கூறுகின்றார், இன்னார் வேதத்தைக் கூறுகின்றார் என்று பிற சத்சங்கங்களில் கூறுவர். இங்கு எந்த மகாத்மாவும் கிடையாது. இங்கு தந்தை அமர்ந்து புரிய வைக்கின்றார். முதலில் நம்பிக்கை ஏற்படாத வரைக்கும் என்ன புரிந்து கொள்ள முடியும்! இவர் குறிப்பிட்ட வேதத்தைக் கூறுகின்றார், இராஜ்ய கல்வியை கற்பிக்கின்றார் என்று பிற சத்சங்கங்களில் கூறுவர். இங்கு வேத சாஸ்திரம், இராஜ்ய கல்விக்கான விசயம் எதுவுமில்லை. பாபா, இவர் மூலமாக கற்பிக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக் கின்றீர்கள். இதனைப் புரிந்து

கொள்ளவில்லை யெனில் என்ன செய்வது? வாயுமண்டலத்தை மேலும் கெடுத்து விடுவார்கள். இங்கு உங்களிலும் கூட அனைவரும் சிவபாபாவின் நினைவில் கேட்கின்றீர்கள், சிவபாபா பிரம்மாவின் மூலம் படிப்பிக்கின்றார் என்பது கிடையாது. இல்லை, சிவபாபாவின் கற்பித்தல் ஆகும் ....... இவ்வாறு எதையும் புரிந்து கொள்வதில்லை. யதார்த்தமாகப் புரிந்து கொள்வது மிகவும் கடினமாக இருக்கின்றது. கற்பிக்கக் கூடியவர் சிவபாபா என்பதை நினைவில் இருக்க வேண்டும். மேலும் நான் மாணவன் என்ற நினைவு புத்தியில் முழு நாள் இருந்தால் நம்பர் ஒன்னில் சென்று விடுவீர்கள். ஆனால் உங்களிலும் வரிசைக்கிரமமாக இருக்கின்றீர்கள். பாபா கூறுகின்றார் - கற்பிக்கின்ற என்னை நினைவு செய்யுங்கள். நானே தந்தை, ஆசிரியர், குருவாக இருக்கின்றேன். மூன்று பேரையும் ஒன்றாக நினைவு செய்ய வேண்டும். லௌகீக ரீதியில் தந்தைத் தனியாகவும், ஆசிரியர் தனியாகவும், குரு தனியானவராகவும் இருப்பர். இங்கு ஒருவரை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். மேலும் எளிமையானதாக இருக்கின்றது. ஆனால் மாயை நினைவில் இருக்க விடுவதில்லை. அடிக்கடி புத்தியிலும் தொடர்பை துண்டித்து விடுகின்றது. குழந்தைகளாகிய நீங்கள் உங்களுக்குள் அமர்ந்து இருப்பீர்கள். ஏதாவது இயந்திரத்தை இயக்கிக் கொண்டு இருப்பீர்கள் அல்லது வெண்ணெய் எடுத்துக் கொண்டிருக் கின்றீர்கள். அப்பொழுது சிவபாபாவின் நினைவில் இயந்திரத்தை இயக்குகின்றீர்களா? சிவபாபா வின் நினைவில் பாபாவின் யக்ஞத்திற்காக வெண்ணெய் தயாரித்துக் கொண்டிருக் கின்றேன். எவ்வளவு குஷிக்கான விசயமாகும்! யக்ஞத்திற்காக உணவு தயாரிக்கின்றேன். குஷி ஏற்படுகின்ற தல்லவா! ஆனால் அடிக்கடி மறந்து விடுகின்றீர்கள். பிறகு சுயம் முயற்சி செய்ய வேண்டி யிருக்கும். ஒருவருக்கொருவர் நினைவை ஏற்படுத்தக் கூடிய முயற்சி செய்யக் கூடியவர்கள் தேவை. இருப்பினும் சிவபாபாவின் நினைவில் உணவு சமைத்தால் சக்தி நிறைந்து விடும். உங்களது மனநிலை மிகவும் நல்லதாக ஆகிவிடும். ஆனால் அவ்வாறு ஏற்படுவதில்லை. பிரம்மா போஜனத்திற்கு அதிகமான மகிமை இருக்கின்றது. ஆனால் ஆத்மா சிவபாபாவின் நினை விலிருந்து தயாரிக்க வேண்டும். இப்படிப்பட்ட சக்திகளின் களஞ்சியம் இருக்க வேண்டும். நினை விலிருந்து உணவு சமைக்கும் பொழுது தான் சக்தி கிடைக்கும். அதுவும் சக்திகளின் புத்தியில் வருவதில்லை. இல்லையெனில் முயற்சி செய்ய வேண்டும். தனது கைகளினால் சிவபாபாவின் நினைவில் இருந்து உணவு சமைக்க வேண்டும் என்ற ஆசை பாபாவிடம் இருக்கின்றது. பயிற்சி செய்ய வேண்டும். நினைவு நிலையாக இருக்கின்றதா? என்று பாருங்கள். பாபா சவால் விடுகின்றார்- யாரெல்லாம் சமையல் அறையில் இருக்கின்றீர்களோ முயன்று பாருங்கள். ஒரு மணி நேரம் கூட நினைவு செய்ய முடிவதில்லை என்பது பாபாவிற்குத் தெரியும். நினைவில் இருக்கக் கூடியவர்கள் ஞானம் நிறைந்தவர்களாக இருப்பின் இரட்டை சேவையில் ஈடுபட்டு விடுவார்கள். எது வரைக்கும் முட்களை மலர்களாக ஆக்கவில்லையோ அதுவரைக்கும் எதற்கும் உதவாதவர்களாக இருக்கின்றீர்கள். நரனிலிருந்து நாராயணன் ஆக்கக் கூடிய சேவை செய்பவர்கள் தான் இராஜ்யத்திற்குத் தகுதியானவர்களாக ஆகின்றனர். அதிர்ஷ்டம் எந்த அளவிற்கு இருக் கின்றதோ அந்த அளவிற்கு முயற்சியின் படி அதிர்ஷ்டத்தை அடைந்து கொண்டே இருக்கின்றனர். அனைவருக்கும் தந்தை கூறுகின்றார் - யார், எந்த அளவிற்கு செய்கின்றார்களோ அந்த அளவிற்கு அவர்கள்

அடைவார்கள்.

தனது மிக அன்பான தந்தையை நினைவு செய்ய வேண்டும். நினைவில் தான் முயற்சி இருக் கின்றது. பாபாவும் கூறுகின்றார் - நானும் அதிகமான உபாயம் (யுக்தி) செய்கின்றேன். ஆனால் ஒன்றும் ஏற்படுவதில்லை. அதிகமான முயற்சி இருக்கின்றது. முயற்சி செய்து செய்து கடைசியில் கர்மாதீத் நிலை ஏற்படும். பிறகு சாட்சாத்கார் செய்து கொண்டே இருப்பீர்கள். மாயை வராது. இங்கு அமர்ந்து அமர்ந்து தெய்வீக பார்வையினால் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். இப்பொழுது தொலைகாட்சியில் பார்க்கின்றீர்கள். தொலைகாட்சி என்பது தெய்வீக பார்வை கிடையாது. விநாசத்திற்கான சாட்சாத்கார், வைகுண்டத்திற்கான சாட்சாத்கார் தொலைகாட்சியில் பார்க்க முடியாது. எந்த அளவிற்கு யோகி மற்றும் ஞானியாக இருக்கின்றீர்களோ அவர்களுக்கு வைகுண்டத்திற்கான இராஜ்யத்தைப் பார்க்க முடியும். தொலைகாட்சிப் பெட்டி இல்லாமலேயே நீங்கள் ஜெர்மனி, லண்டன் போன்றவைகளை பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். தெய்வீக பார்வைக்கான சாட்சாத்கார் ஏற்படுவது அதிசயமாகும். உண்மையான உள்ளத்துடன் தந்தையின் சேவையில் ஈடுபடும் பொழுது தான் மஜா (சந்தோஷம்) ஏற்படும். கடைசியில் புத்தியும் கூறும், பாபாவும் அதிகமாக கவனிப்பார். மகிழ்விப்பது, சுற்றிக் காண்பிப்பது இவைகளெல்லாம் (உபசரிப்பு) கவனிப்பல்லவா! இவ்வாறு ஆவதற்கு தகுதியானவர்களாக ஆக வேண்டும் அல்லவா! தகுதியானவர் களாக ஆக்கக் கூடியவரை நினைவு செய்வதன் மூலமாகவே தகுதியானவர்களாக ஆகிக் கொண்டே இருப்பீர்கள். எந்த அளவிற்கு நினைவு செய்கின்றீர்களோ, மேலும் சுயதரிசன சக்கரத்தை சுற்றுகின்றீர்களோ அதில் நன்மை இருக்கின்றது. விதையை நினைவு செய்வதன் மூலம் மரத்தின் நினைவும் வந்து விடும். இந்த விசயங்களை உங்களைத் தவிர வேறு யாரும் புரிந்து கொள்ள முடியாது. இந்த நினைவு மற்றும் ஞானத்தின் மூலமாக நாம் சேமிப்பு செய்கின்றோம். இந்த ஆஸ்தி எங்கிருந்து கிடைத்தது? என்பது அங்கு தெரியாது. இது நமது சங்கமத்தின் வருமானமாகும் என்பது அவர்களுக்குத் தெரியாது. இராஜ்யம் கிடைத்து விடுகின்றது. நீங்கள் சதா சுகமானவர்களாக இருக்கின்றீர்கள். மிக உயர்ந்த இலட்சியமாகும். இப்பொழுது நீங்கள் தெய்வீகமானவர்களாக ஆகின்றீர்கள். முழு உலகமும் தெய்வீகமற்றதாக இருக்கின்றது. நீங்கள் மனிதனிலிருந்து தேவதை, தெய்வீக மானவர்களாக ஆகிக் கொண்டிருக்கின்றீர்கள். மனிதர்களை தேவதைகளாக ஆக்கக் கூடியவர் ஒரே ஒரு இறை தந்தையாவார். தந்தை என்ற வார்த்தை கூறுவது மிகவும் எளிதாகும். வயதானவர்களைப் பார்க்கும் பொழுது அவர்களை பிதா அல்லது பாபா என்று கூறுவர். வயதானவர் வயதானவர்களைப் பார்க்கும் பொழுது சகோதரன் என்று நினைப்பர். சிறியவர்கள் பெரியவர்களைப் பார்க்கின்ற பொழுது தந்தை என்று நினைப்பர். நிராகார தந்தையைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை. இறை தந்தை என்று மட்டும் கூறி விடுகின்றனர். நாம் ஆத்மாக்கள், நமது தந்தை அவர் என்று புரிந்து கொள்வதில்லை. தந்தை கண்டிப்பாக ஆஸ்தி கொடுப்பார். நமது தந்தை நமக்கு ஆஸ்தி கொடுத்துக் கொண்டிருக்கின்றார் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். இந்த ஆஸ்திக்காகவே நாம் அடிக்கடி அழைத்து வந்தோம், பிரார்த்தனை செய்து வந்தோம். இப்பொழுது அவரே படிப்பித்துக் கொண்டிருக்கின்றார்.இப்பொழுது நாம் பிரார்த்தனை அதாவது பக்தி செய்வதிலிருந்து விடுபட்டிருக் கின்றோம். மிகவும் மஜாவான மகிழ்ச்சி

அளிக்கும் ஞானமாகும். நீங்கள் நம்முடைய எல்லையற்ற தந்தை என்று கூறுகின்றீர்கள், பிறகு என்னை விட்டு விட்டு லௌகீக தந்தையிடத்தில் புத்தி ஏன் செல்கின்றது? ஆனால் அதிர்ஷ்டம் இல்லாதவர்களின் புத்தியில் அமருவதில்லை. எமது அதிர்ஷ்டத்தில் இராஜயோகத் திற்கான பாக்கியம் இல்லை என்று தானே கூறுகின்றனர். ஆக பாபா என்ன செய்ய முடியும்? ஏன் அதிர்ஷ்டத்தை உருவாக்குவதில்லை? அதிர்ஷ்டத்தை உருவாக்குவதில் யாருக்கும் தடை கிடையாது. அதிர்ஷ்டம் இல்லையெனில் பாபாவை விட்டு விடுகின்றனர். பிறகு மாயை என்ற பூனை புத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகின்றது. தந்தையும் என்ன செய்ய முடியும்? மாயை என்ற பூனையின் மீது வெற்றி அடைய வேண்டும். காரியங்கள் செய்தாலும் சிவபாபாவின் நினைவில் இருந்தால் அதிகமான நன்மை ஏற்பட்டு விடும். ஒரு நிமிடம் நினைவு செய்வதன் மூலம் மிக அதிகமான நன்மை அடைய முடியும். ஒருவருக்கொருவர் எச்சரிக்கை கொடுங்கள். பிறகு ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி. பாபா அதிகமான யுகத்திகளை கூறுகின்றார். நல்லது.

இனிமையிலும் இனிய செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ஒருவருக்கொருவர் தந்தையின் நினைவை ஏற்படுத்தக் கூடிய முயற்சி செய்ய வேண்டும். தந்தை, ஆசிரியர், சத்குரு மூவரையும் ஒன்றாக நினைவு செய்ய வேண்டும். உணவு சமைக்கும் பொழுது மேலும் சாப்பிடும் பொழுது நினைவில் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

2) உண்மையான உள்ளத்துடன் தந்தையின் சேவையில் ஈடுபட வேண்டும். முள்ளை மலராக, மனிதனை தேவதையாக்கும் சேவை செய்ய வேண்டும்

வரதானம் : தேக உணர்விலிருந்து விலகி பரிஸ்தாவாகி மேலே பறந்து செல்பவராகி அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டவராகுக
தேகமெனும் பூமி உடலுணர்வு, பரிஸ்தா ஆன பிறகு தேக மெனும் பூமியில் எப்படி வர முடியும். பரிஸ்தா பூமியில் கால் வைப்பதில்லை. அவர்களை கீழ் நோக்கி கவர்ச்சி ஈர்க்க முடியாது. கீழே இருந்தால் வேட்டைக்காரன் வேட்டையாடி விடுவான். மேலே பறந்து கொண்டிருந்தால் யாரும் ஒன்றும் செய்ய முடியாது. எனவே ஒருவர் எவ்வளவு தான் தங்க கூண்டாகவே இருந்தாலும் அதில் மாட்டிக் கொள்ளக் கூடாது. என்றுமே சுதந்திரமாக பந்தனமில்லாதவரே பறக்கும் கலையில் செல்ல முடியும்.

சுலோகன்: செய்ய முடியாதவற்றையும் செய்து முடித்து வெற்றியினை அனுபவம் செய்பவரே வெற்றி நட்சத்திரம் ஆவார்.